# அரசறிவியலைக் கற்பதற்கான அணுகுமுறைகள்



MJM. Saneer MA

கடந்த பாடத்தில் அரசறிவியலின் வளர்ச்சி மற்றும் பரிணாமம் பற்றி படித்தோம். இன்றைய தலைப்பில் அரசறிவியல் ஆய்விற்கான முக்கிய அணுகுமுறைகளை நமக்கு அறிமுகப்படுத்தும். இருப்பினும் அரசியல் ஆய்விற்கான வெவ்வேறு அணுகுமுறைகளைப் படிப்பதற்கு முன்னர் அரசறிவியல் என்பது சமூக விஞ்ஞானம் என்ற பெரும் பகுதியின் ஒரு கிளையே என்பதையும் அது இயற்கை விஞ்ஞானத்தில் இருந்து வேறுபட்டது என்பதனையும் நினைவில் கொள்ள வேண்டும். அரசறிவியல் அல்லது பிற சமூக விஞ்ஞான ஆய்வுக்கான முறைகள் மற்றும் அணுகுமுறைகள் உயிரியல், பௌதீகவியல், இரசாயனவியல் போன்ற இயற்கை விஞ்ஞானப் பாடங்களில் பயன்படுத்தப்படும் முறைகளில் இருந்து வேறுபட்டவை.




- அரசறிவியல் அறிமுகமாகிய கி.மு 4ம் நூற்றாண்டில் இருந்தே அதனை கற்பதற்கான அணுகு முறைகளும் அதன் பாடப்பரப்போடு உருவாகி வளர்ச்சி அடைந்தது.
- அரசறிவியலானது பரந்த விடயப்பரப்புகளை உள்ளடக்கியுள்ளதால் அதன் ஆய்வு முறைகள் பலவற்றையும் உள்ளடக்கிய கற்றல் துறையாக உள்ளது.
- அதன் பாடப்பரப்பைப் போலவே அதன் ஆய்வு முறைகளும் நீண்டகால வரலாற்றைக் கொண்டு வளர்ந்துள்ளது.
- அரசறிவியல் கற்கையானது ஏனைய சமூகவிஞ்ஞானப் பாடங்களில் இருந்து தனித்துவமான ஒரு பாடநெறியாக இருபதாம் நூற்றாண்டிலேயே அடையாளப்படுத்தப்பட்டது. அவ்வாறே அரசறிவியலில் ஆய்வு முறைகளாக இன்று நாங்கள் கருதுகின்றவைகளில் பெரும்பாலானவை இருபதாம் நூற்றாண்டில் வளர்ச்சி அடைந்தவைகளாகும்.




**அணுகுமுறையுடன் தொடர்டைய முக்கிய சிந்தனையாளர்கள் சிலரையும் அவர்களால் எழுதப்பட்ட நூல்களையும் உங்களால் கண்டுபிடிக்க முடியுமா?**

| | |
|---|---|
|  | பெயர் : ………………………………………………………………………..<br>நூல் : ………………………………………………………………………..<br>……………………………………………………………………….. |
|  | பெயர் : ………………………………………………………………………..<br>நூல் : ………………………………………………………………………..<br>……………………………………………………………………… |

| | |
|---|---|
|  | பெயர் : ..........................................................................<br>நூல் : ..........................................................................<br>.......................................................................... |
|  | பெயர் : ..........................................................................<br>நூல் : ..........................................................................<br>.......................................................................... |
|  | பெயர் : ..........................................................................<br>நூல் : ..........................................................................<br>.......................................................................... |
|  | பெயர் : ..........................................................................<br>நூல் : ..........................................................................<br>.......................................................................... |
|  | பெயர் : ..........................................................................<br>நூல் : ..........................................................................<br>.......................................................................... |
|  | பெயர் : ..........................................................................<br>நூல் : ..........................................................................<br>.......................................................................... |
|  | பெயர் : ..........................................................................<br>நூல் : ..........................................................................<br>.......................................................................... |
|  | பெயர் : ..........................................................................<br>நூல் : ..........................................................................<br>.......................................................................... |
|  | பெயர் : ..........................................................................<br>நூல் : ..........................................................................<br>.......................................................................... |
|  | பெயர் : ..........................................................................<br>நூல் : ..........................................................................<br>.......................................................................... |
|  | பெயர் : ..........................................................................<br>நூல் : ..........................................................................<br>.......................................................................... |



# பாரம்பரிய அணுகுமுறை மற்றும் நவீன அணுகுமுறை

அரசறிவியல் ஆய்வுக்கான பல்வேறு அணுகுமுறைகளை பாரம்பரிய அணுகுமுறை மற்றும் நவீன அணுகுமுறை என சம்பிரதாய பூர்வமாக வேறுபடுத்தலாம்.

பாரம்பரிய அணுகுமுறைகள் பெரும்பாலும் தத்துவ, சட்ட, நிறுவன, வரலாற்று, அணுகுமுறைகள் அடங்கும். பாரம்பரிய அணுகுமுறையில் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் அல்லது முறைகள் நீண்டகாலமாக மாறாமல் இருந்தன. நீண்டகாலமாக இருக்கும் அம்முறைகளுடன் ஏதாவது அரசியல் தொடர்பான விடயங்களை விளங்க, விளக்க அல்லது ஆய்வு செய்ய முற்படுவது பாரம்பரிய அணுகுமுறையாகும். இம் முறைகளைக் கையாளுகின்ற அரசியல் அறிஞர்களை மரபு ரீதியான அரசியல் அணுகுமுறையாளர்கள் (Classical period writers) என அழைக்கப்பட்டனர்.

அதே நேரத்தில் நவீன அணுகுமுறை அறிவியல் பகுத்தறிவு மற்றும் பகுப்பாய்வு முறைகளை உள்ளடக்கிய இருக்கும். நவீன அணுகுமுறை என்பது மரபுரீதியான மாதிரிகளின் பெறுமதியாக கருத்துக்களை சமூக மற்றும் நடத்தைவாத அறிவியலுடன் ஒருங்கிணைப்பாகும். நவீன அணுகுமுறையில் விஞ்ஞான அணுகுமுறை (நடத்தைவாதம்), கட்டமைப்புசார் அணுகுமுறை, அரசியல் பொருளியல் அணுகுமுறைகள் உள்ளடக்கப்படும். இம் முறைகளைக் கையாளுகின்ற அரசியல் அறிஞர்களை நவீன கால அரசியல் அணுகுமுறையாளர்கள் (Modern period writers) என அழைக்கப்பட்டனர்.

அரசறிவியலுக்கான பாரம்பரிய அணுகுமுறைகள் இரண்டாம் உலகப்போர் காலம் வரை பரவலாக இருந்தன. இந்த அணுகுமுறைகள் அரசியலின் பாரம்பரிய பார்வையுடன் தொடர்புடையது. இவை அரசு, அரசாங்கம், அதிகாரம் பற்றிய ஆய்வை முன்னிலைப்படுத்தியது. எனவே பாரம்பரிய அணுகுமுறைகள் முதன்முறையாக அரசு, அரசாங்கம், அரசியல் அமைப்புக்கள் மற்றும் செயல்பாடுகளுக்கு அடித்தளமாக இருக்கும் கருத்துக்கள் பற்றிய ஆய்வுகளில் அக்கறை கொண்டுள்ளன. இந்த அணுகுமுறைகள் நெறிமுறை மற்றும் கருத்தியல் சார்ந்தவை. இவ்வணுகுமுறைகளை ஆதரிக்கும் அரசியல் அறிஞர்கள் அரசியல் ஆய்வு என்பது அரசாங்கத்தின் முறையான கட்டமைப்புக்கள், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என விரும்பினர். இதனால் என்ன? என்பதைவிட என்னவாக இருக்க வேண்டும், என்பதையே வலியுறுத்தினர்?

**தத்துவார்த்த அணுகுமுறை:** இந்த அணுகுமுறை அரசறிவியல் ஆய்வுக்கான பழமையான அணுகுமுறையாகக் கருதப்படுகிறது. இந்த அணுகுமுறையின் தோற்றம் பிளேட்டோ மற்றும் அரிஸ்டோட்டில் போன்ற தத்துவ ஞானிகளின் காலத்திலிருந்தே காணப்படுகிறது. “தத்துவம் என்பது ஞானத்தின் தேடலாகும்”.

அரசியல் தத்துவமானது அரசியலோடு தொடர்புபட்ட விடயங்களின் தன்மை மற்றும் சரியான அல்லது நல்ல அரசியல் ஒழுங்கைப் பற்றிய உண்மைத் தன்மையைத் தெரிந்து கொள்ளும் முயற்சியாகும். இவ்வணுகுமுறையானது அரசியல் ஆய்விலிருந்து பெறுமானங்களை பிரிக்க முடியாது என்று உறுதியாக நம்புகிறது. எனவே எந்தவொரு அரசியல் சமூகத்திலும் எது நல்லது? எது கெட்டது? என்பதைத் தீர்மானிப்பதே அதன் முக்கிய அக்கறை கொள்கிறது. இது முக்கியமாக அரசியல் நெறிமுறைகளை பற்றிக் கருத்தில் கொள்கின்றது. ஒரு அரசின் தன்மை செயற்பாடுகள் குடியுறிமை மற்றும் கடமைகள் போன்றவற்றை வலியுறுத்துகின்றது.




| தத்துவார்த்த அணுகுமுறையின் முன்னோடிகள் | ஐரோப்பிய அரசியல் சிந்தனையின் பிரதான சக்தியாக இருந்தவர்கள் | இருபதாம் நூற்றாண்டின் சிந்தனையாளர்கள் |
|---|---|---|
| பிளேட்டோ | சிசரோ | மகாத்மா காந்தி |
| அரிஸ்டோட்டில் | சென் ஒகஸ்டின் | எனா எரேன்டி |
| | மக்கியாவல்லி | ஜோன் ரோலஸ் |
| | தோமஸ் ஹொப்ஸ் | சார்ள்ஸ் டெய்லர் |
| | ஜோன் லொக் | யேகன் ஹபர்மஸ் |
| | ரூசோ | |
| | தோமஸ் மூர் | |
| | இம்மானுவேல் காண்ட் | |
| | ஹெகல் | |
| | கார்ள்மாக்ஸ் | |

1) இவர்கள் அரசறிவியலாளர்களாகவன்றி அரசியல் தத்துவவியலாளர்களாக காணப்பட்டமை.
2) இவர்கள் அனைவரும் அரசியலை இலட்சிய (Normative) கோணத்திலேயே பார்த்தமை.

**தத்துவவியல்/இலட்சியவாத அணுகுமுறையின் பிரதான பண்புகள்**

1) மனதால் உருவாக்கிக் கொண்ட ஒரு உன்னதமான அரசியல் முறையை அடிப்படையாகக் கொண்டு அதனைக் கட்டியெழுப்புவதற்காக நிலவ வேண்டிய அரசியல் விஞ்ஞானப் பின்னணியை விபரிப்பதை முதன்மையாகக் கொண்டு இவ்வாய்வு முறை உருவாக்கப்பட்டடுள்ளது.
2) இம்முறையின் பிரதான இயல்பானது இறுதி முடிவை முதலிலேயே தீர்மானித்து அதனை அடையும் வழிமுறைகளை பின்னர் விபரிப்பதாகும்.
3) நடைமுறை நிலையன்றி கற்பனைவாதமே இவ்வணுகுமுறையின் கருவாகும்.
4) இங்கு பயன்படுத்தப்படும் எண்ணக்கருக்களின் விளக்கங்களை ஆழமாக ஆய்வு செய்தல் இவ்வணுகுமுறையின் மற்றொரு பண்பாகும்.
உதாரணங்கள்: அரசியல் என்பது யாது? அரசு என்பது யாது? அது என்ன நோக்கத்திற்காக உள்ளது? அரசிற்கு மக்கள் ஏன் அடிபணிய வேண்டும்? அரசு மற்றும் ஏனைய சமூக நிறுவனங்களுக்கிடையில் காணப்படும் தொடர்பு யாது?
5) பிளேட்டோவின் இலட்சிய அரசு, தோமஸ்மூர் எழுதிய யுடோப்பிய ஆட்சிமுறை மற்றும் ஜீன் ரூஸோவின் பொதுச் சித்தம் என்பன இவ்வணுகு முறையை அடிப்படையாக் கொண்டு கட்டியெழுப்பப் பட்ட அரசியல் சிந்தனைகளாகும்.







முடிவுகளை நிரூபிக்க முடியாத இலட்சியங்கள் மீது நிறுவப்பட்ட ஒரு ஆய்வு முறையாகக் காணப்பட்ட பேதிலும் அரசு, அரசாங்கம், சமூக அரசியல் செயற்பாடுகளுடன் யாவும் அறம், உண்மை, உயர்ந்த கோட்பாடு என்பவற்றுடன் பிணைக்கப்பட்டு ஆய்வினை மேற்கொள்ளும் அணுகு முறையாகவுள்ளது.

**வரலாற்று அணுகுமுறை:** இவ்வணுகுமுறையை ஆதரித்தவர்களின் கருத்தின் அடிப்படையில் வயது, இடம் மற்றும் அது உருவாக்கியுள்ள விடயம் போன்ற வரலாற்றுக் காரணிகளை கவனத்தில் கொள்ளும் போது தான் அரசியல் கோட்பாட்டைப் புரிந்து கொள்ள முடியும். இவ்வணுகுமுறையின் பெயர் வரலாற்றுடன் தொடர்புடையது என்பதால் எந்தவொரு சூழ்நிலையையும் பகுப்பாய்வு செய்ய ஒவ்வொரு அரசியல் யதார்த்தத்தின வரலாற்றையும் ஆய்வு செய்வதை இது வலியுறுத்துகின்றது.

மக்கியாவலி போன்ற அரசியல் சிந்தனையாளர்கள் அரசியல் ஆய்வு எப்போதும் அரசியலும் வரலாறும் சிக்கலான தொடர்புடையவை என்றும் அரசியல் ஆய்வு எப்போதும் ஒரு வரலாற்று முன்னோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் நம்புகிறார்கள்.

இவ்வணுகுமுறையானது ஒவ்வொரு அரசியல் சிந்தனையாளரின் சிந்தனையோ அல்லது சித்தாந்தமோ சுற்றியுள்ள சூழலால் வடிவமைக்கப்படுகிறது என்ற நம்பிக்கையை வலுவாக ஆதரிக்கிறது. மேலும் வரலாறு கடந்த காலத்தைப் பற்றிப் பேசுவதோடு மட்டுமல்லாமல் நிகழ்கால நிகழ்வுகளுடன் இணைகிறது. வரலாறு ஒவ்வொரு அரசியல் நிகழ்வுகளின் மதிப்பீட்டலுக்கும் உதவுகிறது. எனவே கடந்த கால அரசியல் நிகழ்வுகள் நிறுவனங்கள் மற்றும் அரசியல் சூழலைப் படிக்காமல் தற்போதைய அரசியல் சூழ்நிலை/நிகழ்வுகளைப் பகுப்பாய்வு செய்வது தவறு.

**நிறுவனரீதியான அணுகுமுறை:** இது அரசறிவியல் ஆய்வுக்கு மிகவும் பழைமையானதும் முக்கியமானதுமான ஓர் அணுகுமுறையாகும். இம்முறையானது அரசாங்கத்தின் முறையான அம்சங்களை கையாளுகின்றது. அத்துடன் அரசியல் நிறுவனங்கள் மற்றும் அதன் கட்டமைப்புக்கள் பற்றியும் வலியுறுத்துகிறது. எனவே நிறுவன அணுகுமுறை சட்டமன்றம், நிறைவேற்று, நீதித்துறை அரசியல் கட்சிகள், அழுக்கக் குழுக்கள் போன்ற முறையான கட்டமைப்புக்களைப் பற்றி கற்பதில் அக்கறை கொள்கிறது. இந்த அணுகுமுறையின் ஆதரவாளர்கள் பண்டைய மற்றும் நவீன அரசியல் சிந்தனையாளர்களை உள்ளடக்கியது. பண்டைய சிந்தனையாளர்களில் அரிஸ்டாட்டில் இந்த அணுகுமுறைக்கு ஒரு முக்கிய பங்களிப்பாளராக இருக்கிறார். நவீன சிந்தனையாளர்களில், ஜேம்ஸ் பிரைஸ், பென்ட்லி, வால்டர் பேஜோட், ஹரல்ட் லஸ்கி போன்றவர்கள் அடங்குவர்.



**சட்ட அணுகுமுறை:** இந்த அணுகுமுறை அரச சட்டங்களை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்குமான அடிப்படை அமைப்பாகக் கருதுகிறது. எனவே இந்த அணுகுமுறை சட்ட செயல்முறை, சட்ட அமைப்புக்கள், அல்லது நிறுவனங்கள், நீதி மற்றும் சுதந்திரம் ஆகியவற்றுடன் தொடர்புடையது. இந்த அணுகுமுறையினைக் கையாண்ட சிந்தனையாளர்களுள் சிசரோ, ஜீன் போடின், தோமஸ் ஹொப்ஸ், ஜெரமி பெந்தம், ஜோன் ஒஸ்டின், மற்றும் டைசி ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

**ஒப்பீட்டு அணுகுமுறை:** ஒப்பீடு என்பதன் கருத்து "தொடர்புபடுத்துவது" என்பதாகும். பல்வேறு அரசியல் முறைகளையும் நிறுவனங்களையும் ஒன்றாக எடுத்து அவற்றின் நன்மை-தீமை, ஒற்றுமை-வேற்றுமை, என்பவற்றை ஆராய்ந்து மிகவும் உயர்ந்த ஓர் அரசியல் முறையை அல்லது நிறுவனத்தைக் கட்டியெழுப்புதல் இவ்வாய்வு முறையின் கருவாகும்.

**அரசியலில் ஒப்பீட்டு ஆய்வு முறையின் முக்கியத்துவம்**

- தமது நாட்டின் அரசியலை சிறப்பாக விளங்கிக் கொள்வதற்கு வேறு நாடுகளின் அரசியல் பற்றிய அறிவை பெறல் முக்கியமானதாகும்.
- ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் வரலாறு, அரசியல் பின்புலம், அரசியல் நிறுவனங்கள் பற்றிய ஒப்பீட்டு ரீதியிலான அறிவில்லாமல் அந்நாடுகளின் அரசியல் பற்றிய சிறப்பான தெளிவினைப் பெற்றுக்கொள்ள முடியாது.

ஒப்பீட்டு அணுகுமுறையானது, பழைமை ஒப்பீட்டு அரசியல் அணுகுமுறை, இருபதாம் நூற்றாண்டின் ஒப்பீட்டு அரசியல் அணுகுமுறை, சமகால ஒப்பீட்டு அணுகுமுறை மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளன.

1) **பழைமை ஒப்பீட்டு அரசியல் அணுகுமுறை**: இவ்வணுகுமுறை புராதன கிரேக்கம், உரோம், மத்தியகால ஐரோப்பிய அரசியல் சிந்தனைகள் ஊடாக பயணிக்கின்றது. அரிஸ்டோட்டல் தனது அரசியல் (The Politics) என்ற நூலில் அக்கால கிரேக்க குடியரசுகளில் காணப்பட்ட அரசியலமைப்பு வகைப்படுத்தலுக்கு ஒப்பீட்டு ஆய்வினை அடிப்படையாகக் கொண்டே அரிஸ்டோட்டில் கிரேக்கத்தில் நிலவிய அரசியல் அமைப்புகளை முடியாட்சி, உயர்குடியாட்சி, கொடுங்கோண்மையாட்சி, சில்லோராட்சி மற்றும் ஜனநாயக ஆட்சி என வகைப்படுத்தினார்.

2) **இருபதாம் நூற்றாண்டின் ஒப்பீட்டு அரசியல் அணுகுமுறை:** இது 1960 தசாப்தங்களின் பின்னர் கெப்ரியல் ஏ. ஆல்மண்ட், டேவிட் ஈஸ்டன் போன்றவர்களால் அமெரிக்க பல்கலைக் கழகங்களில் விருத்தி அடைந்த ஒன்றாகும்.

   இது அரசறிவியல் கோட்பாடுகளும், விதிமுறைகளும் இயற்கை விஞ்ஞான விதிமுறைகளுக்கு ஏற்றதான விஞ்ஞானமாக அமைய வேண்டும் என்ற கருத்தே இருபதாம் நூற்றாண்டின் ஒப்பீட்டு அரசியல் அணுகுமுறையாகும்.
   அரசியல் நவீனமயமாதல், அரசியல் அபிவிருத்தி, அரசியல் கலாசாரம், அரசியல் சமூகமயமாதல் மற்றும் அரசியல் நடத்தை போன்றன இருபதாம் நூற்றாண்டின் ஒப்பீட்டு அரசியல் அணுகுமுறை கருத்தியல்களாகும்.

3) **சமகால ஒப்பீட்டு அணுகுமுறை:** முன்மாதிரிகளின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட அளவீட்டு கருவிகளைப் பயன்படுத்தாது இருப்பதோடு ஒவவொரு நாட்டினதும் அரசியல் நடைமுறைகளில் இருந்து ஒப்பீட்டு கல்வியை பெயர்த்தெடுத்து அரசியல் விபரிப்பை பலப்படுத்துவதே ஒப்பீட்டு ரீதியான விபரிப்பின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பது சமகால ஒப்பீட்டு அணுகுமுறையின் அடிப்படையாகும்.
   - இதன்போது ஆய்வுக்கு உட்படுத்தக்கூடிய பாரப்பரப்பு பெரும்பாலும் நெகிழ்வுத்தன்மை மிக்கதாக அமையும்.
   - இங்கு அரசியல் யாப்புக்கள், அரசியல் வரலாறு என்பவற்றைப் பற்றி ஒப்பீடுகளை மேற்கொள்ளாது அனுபவம்சார் முறையில் அவதானிக்கக்கூடிய நிகழ்கால அரசியல் கலாசாரம், அரசியல் சமுதாயப்படுத்தல் அரசியல் நடத்தை போன்ற அரசியல் கருப்பொருளை அடிப்படையாக கொண்டு வேறுபட்ட அரசியல் முறைகளை ஒப்பீட்டு ரீதியாக கற்க முடியும்.
   - ஒப்பீட்டு அரசியல் (Comparative Political) என்ற துறை விருத்தியடைவதற்கு இவ்வொப்பீட்டு ஆய்வு முறை அடிப்படையாக அமைந்தது.

## அரசறிவியல் கற்கைக்கான நவீன அணுகுமுறைகள்:

பாரம்பரிய அணுகுமுறைகளின் துணையோடு அரசியலைக் கற்ற அரசியல் சிந்தனையாளர்கள் பிற்காலத்தில் ஒரு புதிய கண்ணோட்டத்தில் அரசியலைப் படிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர். இவ்வாறு பாரம்பரிய அரசியல் அணுகுமுறைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பல்வேறு புதிய அணுகுமுறைகள் பரிந்துரைக்கப்பட்டடுள்ளன. இந்த அணுகுமுறைகள் அரசியல் ஆய்வுக்கான நவீன அணுகுமுறைகள் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளன. பல அணுகுமுறையாளர்கள் இந்த அணுகுமுறையை பாரம்பரிய அணுகுமுறைகளுக்கு எதிர்வினையாகக் கருதுகின்றனர். நவீன அணுகுமுறையின் திருப்பு முனையாக அமைந்தது சமூக விஞ்ஞானப் பாடங்கள் மற்றும் நடத்தைவாத அறிவியலுடன் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்களாகும்.




- இந்த அணுகுமுறையானது அநுபவத் தரவுகளில் இருந்து தீர்மானங்களை/முடிவுகளை எடுக்க முயற்சிக்கின்றன.
- இவ்வணுகுமுறையானது அரசியல் கட்டமைப்புக்கள் மற்றும் வரலாற்றுப் பகுப்பாய்வு பற்றிய ஆய்வுக்க அப்பாற்பட்டவை.
- நவீன அணுகுமுறைகள் விஞ்ஞான ஆய்வு முறைகளை வலியுறுத்துகின்றன. மற்றும் அரசறிவியலில் அறிவியல் சார்ந்த/ விஞ்ஞானபூர்வமான தீர்மானங்களை முடிவுகளை எடுக்க முயற்சிக்கின்றன.

**விஞ்ஞான அணுகுமுறை (நடத்தைவாதம்):** மனிதனின் உண்மையான அரசியல் நடத்தையை அடிப்படையாக்க கொண்டு இவ்வாய்வுமுறை உருவாக்கப்பட்டுள்ளது. அதன் கவனம் தனிநபர்மீது வாக்காளர் தலைவர் புரட்சியாளர் கட்சி உறுப்பினர்கள் போன்றவர்களிடம் உள்ளது. மேலும் குழுவின் அல்லது அரசியல் அமைப்பின் தாக்கங்கள் தனிநபர் அரசியல் நடத்தையின் மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தினையையும் கருப்பொருளாக நோக்குகிறது.

**விஞ்ஞான அணுகுமுறை (நடத்தைவாதம்) முறையின் பிரதான பண்புகளாவன.**

- உண்மையான நிலையை மட்டும் ஆய்வுக்கு உட்படுத்தல்.
- பண்பாட்டு விடயங்கள் அல்லது இலக்குகள் ஆராய்யப்பட மாட்டாது.
- தேவையற்ற மதிப்பீடுகளில் இருந்து விடுவிக்கப்பட்டிருத்தல்.
- விஞ்ஞான நுட்ப முறைகள் பயன்படுத்தப்படல்.

**முறைமைப் பகுப்பாய்வு அணுகுமுறை:** இது கட்டமைப்புப்பணிப் பகுப்பாய்வு முறை என்றும் அழைக்கப்படும்.

ஐக்கிய அமெரிக்க அரசியல் அறிஞர்களான கப்ரியல் ஆமண்ட், டேவிட் ஈஸ்டன் என்போர் இவ்வாய்வு முறையை அறிமுகப்படுத்தினர்.

அரசியல் முறையில் கட்டியெழுப்பப்பட்டுள்ள கட்டமைப்பக்கள் அவற்றின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகளை மொத்தமாக நோக்கி ஆய்வு செய்வதன் அடிப்படையில் இம்முறை உருவாக்கப்பட்டுள்ளது.

உதாரனமாக: கப்ரியல் ஆமண்ட முன்வைத்த கட்டமைப்புப் பணிகள் பகுப்பாய்வு டேவிட் ஈஸ்டன் முன்வைத்த உள்ளீட்டு வெளியீட்டுப் பகுப்பாய்வு முறை என்பவற்றைக் கூறலாம்.

**டேவிட் ஈஸ்டன் அதன் அறிவுசார் அறிவுசார் அடித்தளமாகக் கருதப்படும் நடத்தைவாதத்தின் முக்கிய பண்புகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டியுள்ளார். அவையாவன:**

**ஒழுங்கு முறைகள்:** அரசியல் அணுகுமுறைகளில் சில ஒற்றுமைகள் இருப்பதாக இந்த அணுகுமுறை நம்புகிறது. அவை அரசியல் நிகழ்வுகளை விளக்குவதற்கும் கணிப்பதற்கும் பொதுமைப்படுத்தல் அல்லது கோட்பாடுகளில் வெளிப்படுத்தப்படலாம். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தனிநபர்களின் அரசியல் நடத்தை குறைவாகவோ அல்லது அதிகமாகவே இருக்கலாம். இத்தகைய ஒழுங்குமுறைகள் ஒரு அரசியல் சூழ்நிலையை பகுப்பாய்வு செய்வதற்கும் எதிர்கால அரசியல் நிகழ்வுகளை கணிப்பதற்கும் ஆராய்ச்சியாளர்களுக்க உதவக் கூடும். இத்தகைய ஒழுங்குமுறைகபள் பற்றிய ஆய்வு அரசறிவியலை சில முன்கணிப்பு மதிப்பீட்டுடன் மிகவும் விஞ்ஞானபூர்வமாக்குகிறது.

**சரிபார்ப்பு:** நடத்தைவாதிகள் எல்லாவற்றையும்/வழங்கப்பட்டதை அவ்வாறே ஏற்க விரும்பவில்லை. எனவே அவர்கள் அனைத்தையும் விஞ்ஞான ரீதியாக ஆய்வுக்குட்படுத்தி சரிபார்க்க வலியுறுத்துகின்றனர். அவர்களைப் பொருத்தவரையில் உண்மைப்படுத்த முடியாதவை/நிரூபிக்க முடியாதவை விஞ்ஞானமல்ல.

**நுட்பங்கள்:** செல்வுபடியாகும் நம்பகரமான மற்றும் ஒப்பீட்டுத் தரவை உருவாக்கும் ஆராய்ச்சிக் கருவிகள் மற்றும் முறைகளைப் பயன்படுத்துவதற்கு நடத்தைவாதிகள் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மாதிரி ஆய்வுகள் கணித மாதிரிகள்/புள்ளிவிபரங்கள் உருவகப்படுத்தல் போன்ற அதி நவீன கருவிகளை ஓர் ஆராய்ச்சியாளர் பயன்படுத்த வேண்டும்.

**அளவு:** தரவுகளை சேகரித்த பிறகு ஆராய்ச்சியாளர்கள் அந்தந்த தரவுகளை ஒப்பீடு செய்து மதிப்பீடு செய்ய வேண்டும்.

**பெறுமானங்கள்:** நடத்தைவாதிகள் பெறுமானங்கிளிருந்து உண்மைகளைப் பிரிக்க அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். இதன் பொருள் ஆராய்ச்சியாளருக்கு எந்தவொரு முன்கூட்டிய கருத்தும் அல்லது ஒரு பக்கச் சார்பான பார்வையும் இருக்கக் கூடாது.

**முறைப்படுத்தல்:** நடத்தை விஞ்ஞானிகளின் கூற்றுப்படி அரசறிவியல் விஞ்ஞானபூர்வமான ஆய்வு முறையாக இருக்க வேண்டும். கோட்பாடு மற்றும் ஆராய்ச்சி ஒன்றாகச் செல்ல வேண்டும்.

**தூய விஞ்ஞானம்:** நடத்தைவாத அணுகுமுறையின் மற்றோர் சிறப்பியல்பு அரசறிவியலை "தூய விஞ்ஞானமாக" ஆக்குவதே அதன் நோக்கமாகும். அரசறியல் விஞ்ஞானபூர்வமான ஆதாரங்களால் சரிபார்கப்பட (பரிசோதனைக்குட்படுத்தப்பட) வேண்டும் என அது நம்புகிறது.

**ஒருங்கிணைப்பு:** நடத்தைவாதிகளின் கூற்றுப்படி அரசறிவியல் வரலாறு சமூகவியல் மற்றும் பொருளாதாரம் போன்ற பல்வேறு சமூக விஞ்ஞானப்பாடங்களிலிருந்து பிரித்துப் பார்க்கப்படக் கூடாது. இந்த அணுகுமுறை அரசியல் நிகழ்வுகள் சமூகத்தின் பல்வேறு காரணிகளால் வடிவமைக்கப்படுவதாக நம்புகிறது. எனவே அரசறிவியலை மற்றைய சமூக விஞ்ஞானப்பாடங்களில் இருந்து பிரிப்பது தவறு எனக் கருதுகின்றனர்.

இவ்வாறு நடத்தைவாத்தின் தோற்றமத்துடன் அரசறிவியல் துறையில் ஒரு புதிய சிந்தனையையும் புதிய ஆய்வு முறையும் உருவாகின.

நடத்தைசார் (விஞ்ஞான) அணுகுமுறையின் சிறப்பை பின்வருமாறு பட்டியலிடலாம்.



- இது அரசறிவியலை விஞ்ஞானமாக்க முயற்சிக்கின்றது. மற்றும் தனிநபர்களின் அன்றாடவாழ்க்கையுடன் அரசியலை நெருக்கமாக கொண்டுவருகிறது.
- இந்த அணுகுமுறையானது எதிர்கால அரசியல் நிகழ்வுகளை கணிக்க உதவுகிறது.
- நடத்தைவாத அணுகுமுறையானது பல்வேறுபட்ட அரசியல் சிந்தனையாளர்களால் நடத்தைவாத அணுகுமறை மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்காக பாராட்டப்பட்டாலும் அது தொடர்பான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.

**நடத்தைவாத அணுகுமுறை குறித்த கண்டணங்கள்.**

- மனித நடத்தையான சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்க ஏற்ப மாறுபடுவதனால் உறுதியான எதிர்வு கூறலை முன்வைக்க முடியாமை.
- மனித நடத்தையை ஆராய்வதும் கணிப்பதும் திட்டவட்மான முடிவைப் பெறுவம் கடினமான பணியாகும்.
- எடுத்துக்காட்டாக: இதுபோன்ற சூழ்நிலைகளில் இவ்வாறு தான் நடந்து கொள்வர் என திட்டவட்மாகக் கணிக்க முடியாது.
- மேலும் ஆராய்ச்சியாளர் ஒரு மனிதராக இருப்பதால் நடத்தைவாத வல்லுனர்களால் நம்பப்படுவது போன்று எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நடுநிலை வகிப்பதில்லை.



**பெண்ணியல்வாத அணுகுமுறை:** பெண்கள் அரசியல் செயற்பாடுகளில் பங்குபற்ற வேண்டியதன் அவசியத்தினை முன்னிலைப்படுத்தி பெண்கள் அரசியலில் பங்குபற்றுதலை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு முன்வைக்கப்பட்ட அணுகுமுறையே பெண்ணியல்வாத அணுகுமுறையாகும்.

அரசியல் மற்றும் சமூக ஆய்வுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய பெண்ணியல்வாதம் கற்கை நெறியாக 1970 களில் மாற்றமடைந்தது. இது பெண்ணியல்வாத கற்கைத் துறையின் பிரதான பிரிவாகும். பெண்ணியல்வாத அணுகுமுறை அரசியல் தொடர்பில் அதிமுக்கிய வினாக்களை எழுப்பியது மட்டுமின்றி "அரசியல்" என்ற எண்ணக்கருவின் விளக்கத்தையும் விருத்தி செய்தது.

பெண்ணியல்வாத ஆய்வாளர்களில் முதன்மையானவராக மக்கிஹிம் (Maggie Humm), றிபெக்கா வோக்கர் (Rebecca Walker) விளக்குகின்றனர்.

அரசறிவியல் ஆய்வு விமர்சனம் மற்றும் கோட்பாடுகள் பெண்ணியல்வாத அணுகுமுறையினால் ஏற்பட்ட மாற்றங்களை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

- அரசு, அரசியல் அதிகாரம், ஜனநாயகவாதம், பொதுவுடைமைவாதம், சுதந்திரம், சமத்துவம், நீதி, நியாயத்தன்மை, உரிமைகள், பாரபட்சம் காட்டுதல், சுரண்டல், அழுத்தம், எதிர்ப்பு, அரச கொள்கை, பிரசாவுரிமை போன்றன அரசறிவியலில் காணப்படும் அதிமுக்கிய எண்ணக்கருக்களாகிய இவை அனைத்து பால்நிலை (Gender) என்ற பிரிப்பு தொடர்பில் மீளாய்வுக்கு உட்படுத்தலும் அவற்றின் விடயப்பரப்புகளில் பால்நிலை தொடர்பான அணுகுமுறைகளை சேர்த்தல்.

- வகுப்பு, இனம், சமூகம், பிரசை போன்றன அரசறிவியலின் அதிமுக்கிய அடையாள எண்ணக்கருக்களில் ஆண் பெண் பால்நிலையை இணைத்துக்கொள்ளல்.







**பின்வரும் பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்யுங்கள்**

**1.** அரசறிவியல் அணுகுமுறைகள் என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்துக.?
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………...

**2.** அரசியல் அணுகுமுறைகள் பல தோன்றக் காரணங்கள்
(1) …………………………………………………………………………………………
(2) …………………………………………………………………………………………

**3.** அரசறிவியல் அணுகுமுறைகளை வகைப்படுத்துக.
(1) …………………………………………………………………………………………
(2) …………………………………………………………………………………………

**4.** பாரம்பரிய அணுகுமுறைகளில் பெரும்பாலும் ……………………………………………, ……………………………………………, ……………………………………………, ……………………………………………, போன்ற அணுகுமுறைகள் அடங்கும்.

**5.** நவீன அணுகுமுறைகளில் பெரும்பாலும் ……………………………………………, ……………………………………………, ……………………………………………, ……………………………………………, போன்ற அணுகுமுறைகள் அடங்கும்.

**6.** அரசறிவியலில் ஆய்வு முறைகளாக இன்று நாங்கள் கருதுகின்றவைகளில் பெரும்பாலானவை ………………………………………….. நூற்றாண்டில் வளர்ச்சி அடைந்தவைகளாகும்.

**7.** பண்புரீதியாக வேறுபடுத்துக.

| பாரம்பரிய அணுகுமுறை | நவீன அணுகுமுறை |
|---|---|
| • | • |
| • | • |
| • | • |
| • | • |
| • | • |
| • | • |
| • | • |
| • | • |

8. அணுகுமுறைகளுடன் தொடர்புடைய முக்கிய அறிஞர்கள் மற்றும் அவ்வணுகுமுறைகளின் சிறப்பியல்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

**இலட்சியவாத அணுகுமுறை**

- ....................................................................................................
- ....................................................................................................
- ....................................................................................................
- ....................................................................................................

**வரலாற்று அணுகுமுறை**

- ....................................................................................................
- ....................................................................................................
- ....................................................................................................
- ....................................................................................................

**சட்ட அணுகுமுறை**

- ....................................................................................................
- ....................................................................................................
- ....................................................................................................
- ....................................................................................................

**நிறுவனரீதியான அணுகுமுறை**

- ....................................................................................................
- ....................................................................................................
- ....................................................................................................
- ....................................................................................................

**ஒப்பீட்டு அணுகுமுறை**

- ....................................................................................................
- ....................................................................................................
- ....................................................................................................
- ....................................................................................................



# Let us know what you think

Please give us feedback on saneermjm@mail.com, so we can provide content that's truly useful and helpful. Thanks!

MJM. Saneer.